**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 11/2024 PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுகன்யா | க–பெ | வெற்றிச்செல்வன் |
| ஊர்: | : | அரியக்குடி | சமயம்: | |
| வயது: | : | 32/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2024

-----------------------------------------------------------------------------------------------

10.10.2024

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பு 3 வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

ராம்நாடு சுபலெட்சுமி பஜாஜ் பெயரில் ஏற்பட்ட **ரசீதுகள் 4 நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ. 9 ஆகும்.** அச புகார்தாரர் நிறுவனம் ஊழியர்களுக்கு கடன் வழங்கியதற்கான **புத்தகத்தின் பக்கம் 23, 25, 28 நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ. 10 ஆகும். எனது** ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ. 11 ஆகும். **( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)** மீனாட்சி பஜாஜ் நிறுவனத்தின் எனது அடையாள அடையாள அட்டை நகல் ம.சா.ஆ. 12 ஆகும். **( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

<u>**குறுக்கு விசாரணை**</u>

**1) நான் அரியக்குடியில் வசித்து வருகிறேன். என் கணவர் கடந்த 4 ஆண்டுகளாக நடுத்தரமான மளிகைக்கடை நடத்தி வருகிறார். நான் ஸ்ரீ மீனாட்சி பைக்ஸ் காரைக்குடியில் வேலை செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA (HR and Finance) படித்துள்ளேன். நான் மேற்படி நிறுவனத்தில் 2016 ல் 6 வது மாதம்**

வேலைக்கு சேர்ந்தேன். நான் தற்போதும் வேலையில்தான் இருக்கிறேன். என் கணவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடந்த 2 மாதங்களாக விடுப்பில் உள்ளேன். ஸ்ரீ மீனாட்சி பைக்ஸ் நிறுவனத்தில் நான் கணக்காளராக பணிபுரிகிறேன். எங்கள் நிறுவனத்திற்கு மானாமதுரை, திருப்பத்தூர், தேவகோட்டை ஆகிய இடங்களில் கிளைகள் உள்ளது. மீனாட்சி பைக்ஸ் என்ற பெயரில் சிவகங்கையில் ஒரு நிறுவனம் உள்ளது. ஸ்ரீ மீனாட்சி பைக்ஸ் மற்றும் மீனாட்சி பைக்ஸ் ஆகிய நிறுவனங்களின் அனைத்து கிளைகளின் கணக்கு வழக்குகளை நான் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி அனைத்து நிறுவனங்களிலும் வண்டியை விற்கும்போது மற்றும் வாங்கும்போது நடைபெறும் பணப்பரிவர்த்தனை எனக்கு தெரியுமா என்றால் அனைத்து பரிவர்த்தனைகளும் முடிந்த பின்னர் எனக்கு அறிக்கை சமர்பிப்பார்கள்.அன்றைய தினமே அறிக்கை சமர்பிக்கப்படும் என்றால் சரிதான்.

2) எங்கள் நிறுவனத்தில் எனக்கு தெரியாமல் ஒரு ரூபாய் கூட வெளியில் போகாது மற்றும் உள்ளே வராது என்றால் ரசீது சமர்பித்திருந்தால் அதுபற்றி மட்டும் எனக்கு தெரியும். கணிப்பொறியில் தயாரிக்கப்படும் ரசீதுகளுக்கு மட்டும் எனக்கு தெரியும். எங்கள் நிறுவனத்தில் கணிப்பொறி ரசீதும் மற்றும் கையால் பராமரிக்கப்படும் ரசீதும் உள்ளதா என்றால் உள்ளது. கணிப்பொறி ரசீது எனக்கு அனுப்பப்படும்போது கையால் பராமரிக்கப்படும் ரசீதும் உடன் இணைக்கப்பட்டு அனுப்பப்படும். மேற்படி ரசீதுகள் எப்படி எனக்கு கிடைக்கும் என்றால் அங்குவேலை செய்யும் நபர்கள் இங்கு வரும்போது கொடுப்பார்கள் அல்லது மேலாளர் அங்கு செல்லும்போது கொண்டு வருவார். மேற்படி ரசீதுகள் எனக்கு தினமும் சமர்பிக்கப்படாது என்றால் சரிதான். அதிகபட்சம் வாரத்திற்கு ஒருமுறை சமர்பிப்பார்கள். எனக்கு மாத வருமானம் ரூ. 25 ஆயிரம். எதிரி வீரமணிகண்டனை தெரியுமா என்றால் அவர் பணிக்கு சேர்ந்ததிலிருந்து தெரியும். எதிரி மேலாளராக பணியில் சேர்ந்தார். எதிரியின் வேலை என்னவென்றால் மற்ற கிளைகளில் நடைபெறும் சேல்ஸ் மற்றும் ஸ்டாக்ஸ் போன்ற விபரங்களை அறிக்கை தருவதாகும். அந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த அதிகாரமும் எதிரிக்கு கொடுக்கப்பட்டது.

3) நிறுவனத்தில் பண வரவு செலவுகளில் கையால்வதற்கு எதிரிக்கு அதிகாரம் இருந்ததா என்றால் காசாளருக்கு மட்டுமே அதற்கான அதிகாரம் உள்ளது. எதிரி

மேலாளராக ஒட்டுமொத்தஅதிகாரத்துடன் இருந்ததால் பண வரவு செலவுகளையும் எதிரி கையாண்டு இருக்கிறார். எதிரி எந்த ஆண்டிலிருந்து பண வரவு செலவுகளை பார்த்தார் என்றால் 2020 ம் ஆண்டில் இருந்து பார்த்திருக்கிறார். 2020 ம் ஆண்டு முதல் பண வரவு செலவுகளை எதிரி பார்த்து வருகின்ற விபரம் எங்கள் நிர்வாக இயக்குனர்களுக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் இயக்குனர் மற்றும் இயக்குனரின் மகன் ஆகியோர் பண வரவு செலவுகளை கையாளும் அதிகாரத்தை எதிரிக்கு கொடுத்திருந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் எதிரி அதை தவறாக பயன்படுத்தியிருக்கிறார். எங்கள் நிறுவனத்தில் வருமானவரி தாக்கல் செய்வோம் என்றால் சரிதான்.

4) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 2020 ஆண்டு முதல் 2023 வரை புகார்தாரர் மற்றும் புகார்தாரரின் மகனின் நிறுவனத்தில் ரூ. 3 லட்சத்து 57 ஆயிரத்து 392 மற்றும் 24 லட்சத்து 98 ஆயிரத்து 648 ரூபாய் கையாடல் செய்த விபரம் வருமானவரி தாக்கல் செய்தபோதுதான் தெரியவந்தது என்றால் இராமநாதபுரத்தில் உள்ள சுபலெட்சுமி பஜாஜ் டீலர் 4 வாகனங்கள் விற்பனை செய்திருந்தோம் அதற்கான தொகை வராமல் இருந்தது. அதை விசாரணை செய்தபோது நிறுவனத்தின் கணக்கிற்கு பணம் செலுத்தப்படாமல் எதிரியின் தனிப்பட்ட கடனிற்கு பணம் செலுத்தப்பட்ட விபரம் தெரியவந்தது. அதன் பின்னர் வாரா கடனாக இருந்த அனைத்து கடன்களையும் விசாரித்தபோது எதிரி அவரது தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்தகோரி கையாடல் செய்தது தெரியவந்தது. மேற்படி கையாடல் 2020 ஆண்டு முதல் நடந்துள்ளது

5) பணம் வரவில்லை என்றால் மேலாளர்தான் கேட்பார். எங்களிடம் பணம் வசூலிப்பதற்கு தனியாக ஆள் இல்லை. சுந்தர்ராஜன் என்ன வேலை செய்கிறார் வசூல் செய்கிறார். விஸ்வநாதன் பதிவாளர் பிரிவில் வேலை செய்கிறார். 2023 ம் ஆண்டு மே 20-ம் தேதி வாராக்கடன்களை ஆய்வு செய்தபோதுதான் மேற்படி சுபலெட்சுமிபைனான்ஸ் நிறுவனம் 4 வாகனங்களுக்கு பணம் செலுத்தாத விபரம் தெரியவந்தது. எனக்கு தெரியாமல் வண்டி விற்பது மற்றும் வாங்குவது போன்றவற்றிக்கு ஏற்படும் தொகை குறித்து எனக்கு தெரியாமல் நடைபெறாது என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்துதான் அனைத்து பண பரித்தனையும் நடைபெற்றது

என்றாலும் அதற்காக நான் எதிரியிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் எதிரியிடம் கடன் வாங்கியதற்கு ஆதாரமான Gpay பதிவு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னை காரைக்குடி வடக்கு காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்த போது எதிரியிடம் நான் கடன் பெற்றிருப்பதாக எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

6) நான் எதிரியிடம் ரூ. 4 லட்சத்து 50 ஆயிரம் கடன் பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் மளிகை கடையை ஆரம்பிப்பதற்கு எதிரியிடம் கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. பேங்க் ஆப் இந்தியாவில் என் கணவர் பெயரில் கடன் பெற்று மளிகை கடை வைத்தோம். வங்கியில் எங்களுக்கு எவ்வளவு கடன் தொகை கொடுத்தார்கள் என்றால் முத்ரா லோன் மூலம் ரூ. 2 லட்சமும், சிசி லோன் மூலம் ரூ. 2 லட்சமும் கொடுத்தார்கள். எதிரியை எங்கள் நிறுவன இயக்குனர்களுக்கு பிடிக்காத காரணத்தினால் எதிரிக்கு எதிராக என்னை சாட்சியம் அளிக்க சொல்லி சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எதிரியின் கையாடல் அனைத்தும் எனக்கு தெரிந்துதான் நடைபெற்றது என்றாலும் அதற்கு நான் உடந்தை என்றாலும் சரியல்ல. நான் எங்கள் நிறுவனத்திற்காகவும் இயக்குனர்களுக்காகவும் ஆதரவாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கையாடல் செய்ததாக சொல்லப்படும் தொகையை எதிரி காசாளரிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதை நான் கையாடல் செய்துவிட்டு எதிரி மீது பழி சுமத்துகிறேன் என்றால் சரியல்ல. எதிரியே ஒப்புக்கொண்டு பணத்தைதிரும்ப தருவதாக சொன்னார். எங்கள் நிறுவனம் என்னை வேலையை விட்டு நீக்கமாட்டோம் என்று கூறி என்னை பொய்சாட்சியம் அளிக்க சொன்னார்கள் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)

விரைவு நீதிபதி காரைக்குடி